(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 54 முதல் 63 வரையிலான 10 அறிக்கைகளை அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளியவனான என்னை மனுக்கள் குழுவின் தலைவராக நியமித்து, அறிக்கையைச் சமர்ப்பிக்க வாய்ப்பு தந்த முதலமைச்சர்களின் முதல்வர், தளபதி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 21–வது மற்றும் 22–வது ஆகிய இரண்டு அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

9. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2022), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.